©

தமிழ்நாடு அரசு
2015

பதிவெண் :
டி.என். / டி.ஆர்.–4

# திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

**திருச்சிராப்பள்ளி, ஜூன் 13, 2015**

**[ எண் 6**

**[ வைகாசி 30, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு - 2046 ]**

**பொருளடக்கம்**

| | | பக்கம் |
|---|---|---|
| உள்ளாட்சித் துறை அறிவிக்கை | ... | 75–83 |

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

**கட்டிடங்கள் கட்டுதல், இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் ஆகியவற்றிற்கு கட்டணம் நிர்ணயம் செய்தல் குறித்த அறிவிக்கை.**

### திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

*(ந.க. எண் எப்1 / 7962 / 14 (மையம்), நாள் : 4–6–2015)*

1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் (ACT 27 / 1994) பிரிவு 451 (2)இன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 38, 2015ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24ஆம் நாளிட்ட தீர்மானத்தின்படி, திருச்சிராப்பள்ளி மாநகர், எல்லைக்குள் கட்டப்படும் கட்டடங்களுக்கு உரிமம் வழங்குதல், இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்குதல் ஆகியவைகளுக்கு கீழ்க்கண்டவாறு அனுமதிக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டண விகிதங்கள் 2015ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1ஆம் நாள் முதல் அமுலுக்கு வருகிறது என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

## அனுமதி கட்டணங்களின் விவரப் பட்டியல்

| வ. எண். (1) | சட்டப் பிரிவு. (2) | விவரம் (3) | அனுமதி கட்டணம். (4) (ரூபாய்) | யூனிட் (5) | அனுமதி காலம். (6) |
|---|---|---|---|---|---|
| 1. | 250 | அ) காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டுமனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற மேற்பார்வை கட்டணம். | 10,000.00 | 1 ஏக்கர் மற்றும் அதன் பாகம். | ஒருமுறை |
| | | ஆ) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனை ஒருங்கிணைப்பு அனுமதி பெற. | 675.00 | ஒரு மனை மற்றும் அதன் பாகம். | ஒருமுறை |
| 2. | | அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம்பெற (அல்லது) அங்கீகரிக்கப் பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்டமனைப்பிரிவில் நில உபயோக மாற்றம் செய்ய அங்கீகாரம்பெற (மேற்பார்வை கட்டணம்). | 12,000.00 | – | ஒருமுறை |
| 3. | 259 | சாலையின் ஓரம் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி அமைக்கப்படும் தற்காலிக விளம்பர தட்டிகள், துணி பேனர்கள். | 300.00 | இனம் ஒன்றிற்கு. | 1 வாரம் |
| 4. | | மாநகராட்சிக்கு சொந்தமான பொது இடங்கள், சாலை, தெரு ஓரங்களில் பந்தல் போடுவதற்கு– (i) கோவில்கள், மசூதிகள், சர்ச் முதலிய மத சம்பந்தமான கட்டிடங்களின் முன்பாக திருவிழா மற்றும் விஷேச காலங்களில் போடப்படும் தற்காலிக பந்தல்கள். | – | இலவசம் | 1 வாரம் |
| | | (ii) துக்க காரியங்களுக்கு கட்டிடங் களின்முன் போடப்படும் தற்காலிக பந்தல்கள். | – | இலவசம் | 1 வாரம் |
| | | (iii) திருமணம் மற்றும் விஷேச காலங் களில் போடப்படும் தற்காலிக பந்தல்கள். (a) கட்டிடங்களின் முன் | 225.00 | இனம் ஒன்றிற்கு. | 1 நாள் |
| | | (b) திருமண மண்டபங்களின் முன் | 1,125.00 | இனம் ஒன்றிற்கு. | 1 நாள் |
| 5. | | மாநகராட்சிக்கு சொந்தமான மின்விளக்கு கம்பங்களில் 2' x 2 $^1/_2$' அளவிலான தட்டிகளில் விளம்பரம் செய்ய விளம்பர வரி கட்டணம். | 1,125.00 | இனம் ஒன்றிற்கு. | 1 ஆண்டிற்கு |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 6. | | மாநகராட்சி பிரேத வண்டி வாடகை | 50.00 | – | நாள் ஒன்றுக்கு. |
| 7. | 268 | குடிசை நீங்கலாக கட்டிடம் கட்ட மனை அங்கீகாரம் (திட்ட அனுமதி)<br>அ) குடியிருப்பு உபயோக கட்டிடம்<br>(i) 100 ச.மீ. வரை உள்ள மனைகளுக்கு. | 562.50 | – | 3 ஆண்டுகள் |
| | | (ii) 100 ச.மீ. முதல் 250 ச.மீ. வரை உள்ள மனைகளுக்கு. | 675.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (iii) 250 ச.மீ. முதல் 500 ச.மீ. வரை அமையும் மனைகளுக்கு. | 2,700.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (iv) 500 ச.மீட்டருக்கு மேல் அமையும் மனைகளுக்கு. | 3,375.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (v) பரிசீலனை கட்டணம் | 225.00 | – | 3 ஆண்டுகள் |
| | | ஆ) குடியிருப்பில்லாத கட்டிடங்கள்<br>(i) 100 ச.மீ. வரை உள்ள மனைகளுக்கு. | 1,125.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (ii) 100 ச.மீ. முதல் 250 ச.மீ. வரை உள்ள மனைகளுக்கு. | 1,125.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (iii) 250 ச.மீ. முதல் 500 ச.மீ. வரை உள்ள மனைகளுக்கு. | 3,375.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (iv) 500 ச.மீட்டருக்கு மேல் உள்ள மனைகளுக்கு. | 4,500.00 | – | 3 ஆண்டுகள் |
| | | (v) பரிசீலனை கட்டணம் | 225.00 | – | – |
| 8. | 271 | தற்காலிக கட்டடப் பொருட்களால் ஆன தற்காலிக கட்டடங்கள். | 11.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 6 மாதம் |
| 9. | 272 | கட்டிட உரிமையாணைக் கட்டணம்<br>I) குடிசை நீங்கலாக புதிய கட்டிடம் கட்டுதல் – பழைய கட்டிடத்தில் மாறுதல்கள் செய்து கட்டிடம் கட்டுதல் – கூடுதல் கட்டிடம் கட்டுதல். | | | |
| | | அ) குடியிருப்பு உபயோக கட்டிடம்<br>(i) குடியிருப்புக்கு 4000 சதுர அடி கட்டிட பரப்பளவு மற்றும் அதன் பாகத்திற்கு. | | | |
| | | தரை தளம் | 22.50 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | 3 ஆண்டுகள் |
| | | முதல் தளம் | 33.75 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | 3 ஆண்டுகள் |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 9. | 272 | (ii) ஒரு குடியிருப்புக்கு மேலும் 4000 சதுர அடிக்கு மேலும் அமையும் கட்டிட பரப்பளவுள்ள கட்டிடங்களுக்கு கீழ் தளங்கள் (Stilt Floor & Cellar). | 56.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | உள்ளூர் திட்டக்–குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை. |
| | | தரை தளம் | 33.75 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | முதல் தளம் | 45.00 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | இரண்டாம் தளம் | 56.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | மூன்றாம் தளம் | 67.50 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | நான்காம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் தளத்திற்கும். | 90.00 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | 272 | ஆ) குடியிருப்பில்லாத கட்டடங்கள் 2000 சதுர அடி கட்டிட பரப்பளவு மற்றும் அதன் பாகத்திற்கு– தரைதளம் மற்றும் முதல் தளம். | 45.00 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | 3 ஆண்டுகள் |
| | | 2000 சதுர அடிக்கு மேல் அமையும் கட்டடப் பரப்பளவு. (i) கீழ் தளங்கள் (Stilt Floor & Cellar) | 56.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | (ii) தரை தளம் | 56.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | உள்ளூர் திட்டக்–குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை. |
| | | (iii) முதல் தளம் | 67.50 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | (iv) இரண்டாம் தளம் | 90.00 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | (v) மூன்றாம் தளம் | 112.50 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |
| | | நான்காம் தளம் மற்றும் அதன் மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் தளத்திற்கும். | 135.00 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 9. | | அ) கட்டடப் பொருட்கள் சாலையோரம், பொது இடங்களில் தற்காலிகமாக போக்குவரத்திற்கு இடையூறின்றி சேமித்து வைத்தல் (கட்டட உரிமையாளர் நேரடியாக அவரது சொந்த இடத்தில் சேமித்து வைத்தால் இக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை). | 33.75 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 1 வாரம் |
| | | ஆ) கட்டிட இடிபாடுகளை பொது இடத்தில் சாலையோரத்தில் தற்காலிகமாக சேமித்து வைக்க. | 33.75 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 1 வாரம் |
| 10. | 272–1 | அ) தற்காலிக சினிமா தியேட்டருக்கு தடையின்மை சான்று வழங்குதல். | 16,875.00 | இனம் ஒன்றிற்கு. | ஒரு தடவை |
| | | ஆ) நிரந்தர சினிமா தியேட்டர் கட்ட தடையின்மை சான்று வழங்கல். | 45,000.00 | இனம் ஒன்றிற்கு. | ஒரு தடவை |
| | | இ) கேளிக்கை அனுமதி கட்டணம், சர்க்கஸ், பொருட்காட்சி, கண்காட்சி மற்றும் அனைத்துவகையான சட்டப்படியான கேளிக்கைகள் (பி.பி.ஆர். சட்டப்படியான கட்டணம் தனியாக வசூலிக்கவேண்டும்). | 33.75 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 2 மாதம் |
| | | உரிமம் பெற்ற கட்டிட பட வரைவாளராக பதிவுசெய்ய (முதல் தடவை). | 5,625.00 | ஒருமுறை மட்டும். | – |
| | | உரிமம் கட்டணம் | 3,375.00 | ஒருமுறை மட்டும். | ஒரு வருடம் |
| | | உரிமையாணை புதுப்பித்தல் கட்டணம். | 2,250.00 | புதியது | வருடம் ஒன்றுக்கு. |
| 11. | 283 | அனுமதியின்றி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தவறினால் அபராதக் கட்டணம். | 112.50 | 9 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 6 மாதங் களுக்கு ஒருமுறை. |
| 12. | 286 | பழைய கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்த அனுமதி வழங்க. | 11.25 | 1 ச.மீ. மற்றும் அதன் பாகத்திற்கு. | 6 மாதம் |
| 13. | | அ) கட்டட, மனைப்பிரிவு வரைபடங்கள் கூடுதல் நகல்கள் அத்தாட்சி செய்து கொடுத்தல். | 168.75 | ஒரு நகல் | – |
| | | ஆ) பலமாடி கட்டிட வரைபடங்கள் கூடுதல் நகல் அத்தாட்சி செய்து கொடுத்தல். | 225.00 | ஒரு நகல் | – |
| | | இ) மாநகராட்சி வரைபடம்<br>பெரியது (Size) 0.95 x 1.55 m<br>சிறியது (Size) 0.49 x 0.71 m | 675.00<br>337.50 | ஒன்று<br>ஒன்று | – |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 13. | | ஈ) அனைத்துவகையான இதர சான்றிதழ் வழங்க. | 450.00 | ஒன்றிற்கு | – |
| | | உ) சர்வே வரைபட நகல் மற்றும் பதிவேட்டின் நகலுக்கும். | 168.75 | நகல் ஒன்றிற்கு. | – |
| | | ஊ) அலுவலக மூலமாக அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு வரைபடங்கள் தயார்செய்து நகலுடன் சான்றிதழ் வழங்க. | | வேலையின் தன்மையை பொறுத்து ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் வசூலிக்கப்படவேண்டும். | |
| 14. | | வரன்முறைப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அந்தந்த அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வப்பொழுதுள்ள நடப்பு விலை விகிதப்படி அபிவிருத்திக் கட்டணங்கள் வசூலிக்கப்படவேண்டும். வரன்முறைக் கட்டணம் அரசாணையில் உள்ளது போல் வசூலிக்கப்படவேண்டும்.<br>குறிப்பு— தடையின்மை சான்றிதழ் வழங்கும்போது, வசூலிக்கப்பட்ட சந்தை வழிகாட்டு மதிப்பீட்டினை காட்டிலும் பத்திரம் பதிவு செய்யும்போது கூடுதலாக வழிகாட்டு மதிப்பீடு உள்ளதாக பின்னர் தெரியவந்தால், பத்திர பதிவில் குறிப்பிட்ட நிலக் கிரையத் தொகையின்படி கூடுதல் நில ஒதுக்கீடு கட்டணம் வசூலிக்கப்படும். மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டே தடையின்மை சான்று சம்பந்தப்பட்ட வார்டு அலுவலகங்களின் உதவி ஆணையர்களால் வழங்கப்படும். | | | |
| 15. | 287 | புதிதாக கிணறு அமைத்தல் அல்லது திருத்தி அமைத்தல்.<br>அ) மனை வரைபடம் அங்கீகரிக்க | 225.00 | ஒவ்வொன்றிற்கும். | ஒரு வருடம் |
| | | ஆ) கிணறு வெட்ட அனுமதி அல்லது புதுப்பித்தல். | 225.00 | ஒவ்வொன்றிற்கும். | ஒரு வருடம் |
| | | இ) உயர்மட்ட தொட்டி கட்டுதல் | 225.00 | ஒவ்வொன்றிற்கும். | ஒரு வருடம் |
| | | ஈ) போர்வெல் அமைத்தல் | 450.00 | ஒவ்வொன்றிற்கும். | ஒரு வருடம் |
| 16. | 288 | குடிசை புதிதாகவோ, கூடுதலாகவோ அல்லது கூரையை மாற்றி அமைக்கவோ கட்டும் கட்டுமானங்களுக்கு. | கட்டணம் ஏதும் இல்லை (இலவசம்) | 1 ச.மீ. மற்றும் அதன் பாகம். | 3 ஆண்டுகள் |
| | | சுற்றுச்சுவர் 2.40 மீ உயரத்திற்கு மேல் | 225.00 | 1 RM | 1 ஆண்டுகள் |
| | | குளியலறை, மல அறை அல்லது இரண்டும் சேர்த்து டாய்லெட் கட்டுவதற்கு, திருத்தி கட்டுவதற்கு (புதிதாக பிரதான கட்டிடங்களுடன் கட்டும் குளியலறை, மல அறைகளுக்கு இது பொருந்தாது). | 112.50 | ஒவ்வொரு இனத்திற்கும். | – |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 17. | 361 | II) இயந்திர நிறுவனங்கள் மின்மோட்டார்கள் அனுமதி | | | |
| | | அ) குடிசைத் தொழில் பட்டியலில் உள்ள தொழில்கள் 5 குதிரை மின் மோட்டார் வரை. | 1,687.50 | 5 குதிரை சக்தி வரை. | ஒரு தடவை |
| | | ஆ) குடிசைத் தொழில் சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் ஒவ்வொன்றிற்கும். | 450.00 | ஒவ்வொன் றிற்கும். | ஒரு தடவை |
| | | இதர ஆலைகள் அ) 10 குதிரை சக்தி மோட்டார் வரை | 2,250.00 | 10 குதிரை சக்தி அல்லது அதன் பாகம். | ஒரு தடவை |
| | | ஆ) 25 குதிரை சக்தி மோட்டார் வரை | 4,500.00 | 25 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | இ) 50 குதிரை சக்தி மோட்டார் வரை | 6,750.00 | 50 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | ஈ) 75 குதிரை சக்தி மோட்டார் வரை | 9,000.00 | 75 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | உ) 100 குதிரை சக்தி மோட்டார் வரை | 11,250.00 | 100 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | ஊ) 150 குதிரை சக்தி மோட்டார் வரை | 22,500.00 | 150 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | எ) 200 குதிரை சக்தி மோட்டார் வரை | 33,750.00 | 200 குதிரை சக்தி மற்றும் அதன் பாகம். | ஒரு தடவை |
| | | ஏ) 200 குதிரை சக்தி மின் மோட்டார் களுக்கு கூடுதலாக மற்றும் அதன் பாகத்திற்கு ரூ. 500 வசூல் செய்தல் வேண்டும். | 33,750.00 | – | ஒரு தடவை |
| | | ஐ) ஒவ்வொரு இய்ந்திரங்களுக்கும் | 450.00 | ஒவ்வொரு இயந்திரம். | ஒரு தடவை |

## பொது நிபந்தனைகள்

1. அனுமதியின்றி நடைபெறும் கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும்பொழுது கட்டிட உரிமையாணைக் கட்டணத்தின் 1 மடங்கு (100 சதவீதம்) கூடுதலாக வசூலிக்கப்படும். இது காலம் கடந்து புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கும் பொருந்தும்.

2. உரிமக்காலம் முடியும் முன்னர் புதுப்பிக்கப்படும் உரிமையாணைகளுக்கு எவ்வித சலுகையின்றி மேலே குறிப்பிட்ட சட்ட நடைமுறையில் உள்ள கட்டணங்களே வசூலிக்கப்படும்.

3. அனைத்து மனுக்களின் மீது பெறப்படும் மொத்த கட்டணத்தில் 25 சதவீதம் மேற்படி மனு பரிசீலனைக் கட்டணம் என சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு பொருள் கொள்ளவேண்டும். எந் சந்தர்ப்பத்திலாவது ஏதாவது ஒரு கட்டணத்தை திரும்ப வழங்க நேரிட்டால் தகுதிவாய்ந்த இனங்களுக் மட்டும் 25 சதவீதம் கழித்து மீதித்தொகையை மட்டுமே திரும்ப வழங்கப்படும். அங்கீகரிக்கப்படா மனைப்பிரிவில் செலுத்தப்பட்ட வரன்முறைக் கட்டணங்கள், அபிவிருத்தி கட்டணங்கள் மற்றும் சாலை அபிவிருத்தி கட்டணங்கள் எக்காரணத்தை கொண்டும் திரும்ப வழங்க இயலாது. மனை அங்கீகரிக் செலுத்தப்பட்ட திட்ட அனுமதிக் கட்டணமும் திரும்ப வழங்க இயலாது.

**கட்டிட கழிவுகள் ஏற்படுத்தும் தனிநபர் அல்லது நிறுவனங்கள் கட்டிட கழிவுகளை அப்புறப்படுத்தும் வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டுப்பாடுகள்.**

4. எந்த ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் தங்களது கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத் வேண்டுமெனில் மாநகராட்சிக்கு விண்ணப்பித்து உரிய அனுமதி பெறுதல் வேண்டும். இவ்வாறு இடிப்பதற் 1 சதுர மீட்டருக்கு ரூ. 15 வீதம் மாநகராட்சிக்கு கட்டணம் செலுத்தவேண்டும்.

5. இவ்வாறு இடிக்கப்பட்ட கழிவுகளை மூன்று தினங்களுக்குள் மாநகராட்சியில் நிர்ணயித்துள் இடங்களில் மட்டுமே சொந்தமான வாகனம் அல்லது மாநகராட்சியின் அனுமதிப்பெற்ற வாகனங்க மூலமாகவே அகற்றப்படவேண்டும்.

6. கட்டிட கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடும் லாரிகள், வேன்கள் போன்ற வாகனங்க அனைத்தும் மாநகராட்சியில் தங்கள் எண்களைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

7. மாநகராட்சியில் லாரிகள் ஆண்டுக்கு ரூ. 2,000-ம் மினி லாரி மற்றும் வேன்கள் ரூ. 1,00 செலுத்தியும் தங்கள் வாகனங்களை பதிவு செய்துகொண்டு உரிமம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

8. 60 தினங்களுக்கு மேல் உள்ள காலத்திற்கு ஆண்டு கட்டணம் வசூலிக்கப்படும்.

9. மாநகராட்சி உரிமம் பெறாமல் கட்டிட கழிவுகளை ஏற்றி செல்லும் வாகனங்கள் பிடிக்கப்பட் அவ்வாறான வாகனங்களுக்கு முதல் முறை ரூ. 2,000 அபராதம் விதிக்கப்படும். இரண்டாம் முை ரூ. 5000 விதிக்கப்படும். மூன்றாம் முறையில் இருந்து ஒவ்வொரு முறைக்கும் ரூ. 10,000 வீதம் அபராத விதிக்கப்படும். அபராதம் செலுத்த தவறினால் குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும்.

10. பஞ்சப்பூரில் மாநகராட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் உரிமம் பெற்ற லாரி மற் வாகனங்கள் மூலம் கட்டிட கழிவுகள் கொட்ட அனுமதிக்கப்படும்.

11. கோட்டங்களில் அறிவிப்பு செய்யப்படும் இடங்களில் கொட்டப்பட்ட கழிவுகள் மாநகராட்சியா பின்னர் பஞ்சப்பூருக்கு எடுத்து செல்லப்பட்டு சேகரிக்கப்படும்.

12. பஞ்சப்பூரில் சேகரிக்கும் கட்டிட கழிவுகள் மாநகராட்சி உபயோகத்திற்கு தேவை போ மீதமுள்ளவை ஆண்டு குத்தகை மூலம் விற்பனை செய்யப்படும்.

13. பஞ்சப்பூர் அல்லது மாநகரங்களில் நிர்ணயித்த இடங்களில் கொட்டப்படும் கட்டிட கழிவுகளுக் லாரி லோடு ஒன்றுக்கு ரூ. 250-ம் சிறிய அல்லது மினி லாரி ஒன்றுக்கு ரூ. 150 செலுத்தவேண்டு என்று மாமன்ற தீர்மானம் எண் 265, நாள் 25-10-2013இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

14. கையினால் இயக்கப்படும் இயந்திரங்களுக்கும் வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படுத்தப்பட மின்மோட்டார்கள் மற்றும் இயந்திரங்களுக்கும் கட்டணம் செலுத்துவதிலிருந்து விதிவிலக் அளிக்கப்பட்டுள்ளது.

15. இயந்திர நிறுவனங்கள் அனுமதியின்றி இயந்திரங்களை நிறுவிய பின்னர் மனுச்செய்யும்பொழு நடைமுறைக் கட்டணத்துடன் 100 சதவீதம் கூடுதலாக அபராதமாக வசூல் செய்யப்படும்.

16. அனுமதியின்றி இயந்திரங்கள் / மின்மோட்டார்கள் மாநகராட்சியால் பறிமுதல் செய்து அதன மீண்டும் திரும்ப வழங்க நேரிட்டால், நடைமுறைக் கட்டணத்தைப் போல் மும்மடங்கு அனுமதி கட்டண அபராதமாக செலுத்தவேண்டும்.

17. அ) கட்டிட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்படும் குடியிருப்பு உபயோக கட்டிடங்களின் விண்ணப்பங்களுடன், மழைநீர் சேகரிப்பு வசதி இல்லாத இடத்திற்கு வைப்புத் தொகையாக ரூ. 2,500 செலுத்தவேண்டும்.

ஆ) குடியிருப்பில்லாத மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாக கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு வசதி இல்லாத இடத்திற்கு கீழ்க்கண்டவாறு வைப்புத்தொகை செலுத்தப்படவேண்டும்.

(1) அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடியிருப்பு ஒன்றிற்கு ரூ. 1250 வீதம் வைப்புத் தொகை செலுத்தப்படவேண்டும்.

(2) வணிக உபயோக கட்டிடங்களுக்கு, திறந்தவெளி தளத்தின் பரப்பளவில் ச.மீ. ஒன்றுக்கு ரூ. 125 வீதம் செலுத்தப்படவேண்டும். (உள்ளூர் திட்டக் குழுமத்தில் வைப்புத்தொகை செலுத்திய இனங்களுக்கு பொருந்தாது)

இ) மழைநீர் சேகரிப்பு வசதிகள் 6 மாத காலத்திற்குள் செய்து சம்மந்தப்பட்ட பிரிவு இளநிலை பொறியாளரின் சான்றுடன் விண்ணப்பம் செய்தால், செலுத்தியத் தொகை திரும்ப வழங்கப்படும். தவறினால் மேற்படி தொகை மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். மனுதாரரால் அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு காட்சிப் பொருளாக மட்டும் அல்லாமல் தொடர்ந்து முறையாக செயல்படும் வண்ணம் பராமரிப்பது மனுதாரரின் கடமை. அவ்வாறு பராமரிக்கப்படாத நிலையில் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடம் அபராதமாக ரூ. 1,000 வசூலிக்கலாம்.

18. மதம், துக்க காரியங்கள் போன்றவைக்கு பொது இடங்களில் போக்குவரத்திற்கு இடையூறின்றி அமைக்கப்படும் பந்தல்களுக்கு கட்டணம் கிடையாது என தீர்மானிக்கலாம்.

19. பாதுகாப்பு வைப்புத் தொகை குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்படும் போது ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 75–ம் வணிக உபயோக கட்டிடத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 150–ம் (பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்சாலை உட்பட) வசூலித்துக் கொண்டு அனுமதி உத்தரவு வழங்கலாம். கட்டுமானப் பணி முடிவடைந்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டினால் மேற்படி வைப்புத் தொகையை திருப்பி வழங்கலாம். மாறுதலாக கட்டிடம் இருந்தால் இத்தொகையினை மாநகராட்சி எடுத்துக்கொள்ள வழிவகை செய்து தீர்மானம் நிறைவேற்றலாம்.

**மு. விஜயலட்சுமி,**
*ஆணையர்,*
*திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.*

திருச்சிராப்பள்ளி,
2015 ஜூன் 4.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் திருச்சிராப்பள்ளி அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.